பதிவுசெய்யப்பெற்றது

# இந்து சாதனம்.

ஸ்தாபிதம் (1889)

# THE HINDU ORGAN.

['டெலிபோன்' இல. 56.]

பத்திரிக் கிரயம்.
யாழ்ப்பாணப் பட்டினம்: ஆ 1-க்கு ரூ. 5-00
இலங்கை, இந்தியா: „ ரூ. 8-00
தொலைப்பகுதி: „ ரூ. 9.00
தனிப்பிரதி:
முற்பணம் அனுப்புவோருக்கே பத்திரிகை அனுப்பப்படும்.

சோமவாரத்திலும், குருவாரத்திலும் பிரசுரமாகும்.

"எனைத்தானும் நல்லவைகேட்க வனைத்தானு, மான்ற பெருமை தரும்"

விளம்பர விகிதம்.
முதன் முறைக்கு:—ஒருகலம் ரூ 10-00
„ அரைக்கலம் ரூ. 5-00
„ கால்கலம் ரூ. 8-00
அடுத்த முறைகட்கு டை விகிதங்களிற் பாதி.
விளம்பரங்கள் முற்பண மனுப்பினலன்றிக் கவனிக்கப்படா.

புத்தகம்—சஉ. } யாழ்ப்பாணம்;-பிரசோற்பத்தி௵ கார்த்திகை௴ உகஉ, (1931 டிசெம்பர் 14உ) திங்கட்கிழமை. { இலக்கம்—சசு.

உ
கணபதிதுணை.

சீர்பூத்த கருவிநூ லுணர்ச்சி தேங்கச்
செயபூத்த விகமாக மங்க வோங்கப்
பார்பூத்த புறச்சமய விருள்க ணீங்கப்
பரமபூத்த சைவநிலை பாரோர் தாங்கப்
பேர்பூத்த சிவானந்தத் தினிது தூங்கப்
பிறைபூத்த சடைமவுலிப் பிரானூர் தந்த
வார்பூத்த வறிவிச்சை தொழிலென்றோது
மதம்பூத்தவிநாயகனிருள்வணக்கிவாழ்வாம்

வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாம ரனாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

## திறம் கொளுக்கி ஓடுகள்,

மோர்கன், நட்சத்திரம் 14, இஞ்சுப் பக்கா ஓடு முதலியன அடைமழைக்குங்கசியா. அண்டப் பார்த்தாப் போலக் கூரையில் அடுக்கலாம். பாரங்குறைவு, பெலனதிகம்; நல்ல அழுத்தமான இந்த ஓடுகள் 125 போட்டால், மற்ற ஓடுகள் 150 போடுகிற இடத்தை மூடும்.

விற்கும் இடங்கள்:—
யாழ்ப்பாணம்:—
மு. இராசேந்திரமுப்பர்
கிட்டங்கித்தெரு.
பரித்தித்துறை:—
மு. நமசிவாயம்
கடைத்தெரு.
ஊர்காவற்றுறை:—
கரம்பன்.
திருக்கோணமலை:—S. சின்னையா
வில்லூண்டி.

(H 12, 10-1-32.)

## உயர்தரமான தமிழ் நூல்கள்!

(1) தாயுமானசுவாமிகள் திருப்பாடற்றிரட்டு மெய்கண்ட விருத்தியுரையுடன் ரூ. 4 (2) பட்டினத்துப்பிள்ளையார் திருவாய்மலர்ந்தருளிய பிரபந்தத்திரட்டின் விருத்தியுரை ரூ. 3½ (3) திருக்குறள் மூலமும் பரிமேலழகருரையும், தெளிபொருள் விளக்கப் பதவுரையும், விசேஷக்குறிப்புகளுடன் ரூ. 4. (4) விநோதரசமஞ்சரி ரூ. 2. (5) அராபிக் கதை ரூ. 2½. (6) பழமொழியகராதி ரூ. 3. (7) ஆத்திசூடிப்புராணம் ரூ. 2. (8) கல்லாடம் மூலமும் உரையும் ரூ. 3. (9) நாலடியார் ரூ. 2. (10) நைடதம் மூலமும் விருத்தியுரையும் ரூ. 4. (11) ராமகிருஷ்ணபரமஹம்ஸர் விரிவான சரித்திரம் ரூ. 3.

தமிழ்புத்தககியாட்லாக்
→ இனம். ←
ஒற்றுமை ஆபீஸ்.
2. சைதாப்பேட்டை, மதருஸ்.

ஒற்றுமை ஆபீஸ், சைதாப்பேட்டை, மதராஸ்.

(Y 7 79—89-32)



## பிள்ளையார் கதை.

விநாயகசஷ்டி விரதகாலத்தும் அத்தினத்திற்கு முன்னுள்ள 20 நாட்களும் விநாயக ஆலயங்களிலும் மற்றை ஆலயங்களிலும் அன்பர்களாற் படனஞ் செய்யப்படுவது; இதனகண் விநாயகசஷ்டி விரத மகத்துவமும், இதனை அநுஷ்டித்தோர் பெற்ற பயனும், அநுஷ்டியாமல் விட்டமையால் வந்த ஆபத்தும், விரதம் அநுஷ்டிக்கவேண்டிய முறையும் இலக்கண சுந்தரிகதையும், விநாயகர் மீது படிக்க வேண்டிய தோத்திரபாக்களும் அடங்கியுள்ளன. இலகுவான அகவற்பாவில இக்கதையைப் பாடியவர் வரதராசபண்டிதரவர். சுத்தமான பதிப்பு விலை சதம 15. (அஞ 2½) இந்துசாதன ஆலயத்திற் பெறலாக் கொள்ளலாம். 5 பிரதிகளுக்குக் குறைய வி. பி. பி. மூலம் அனுப்புதல முடியாது. முத்திரையனுப்புவோர், பிரதிகளை அனுப்புவதற்காகிய செலவுஞ் சேர்த்து முத்திரை யனுப்புக.

வண்ணார்பண்ணை 10—12—31. } மனேஜர். சைவப்பிரகாச யந்திரசாலை.



தங்க மெடல்கள் பெற்ற
ஐரோப்பிய மதுரைக் கம்பனிவாரால்
செய்யப்படும்,
திறமான குடை அடையாளமுள்ள

## கொழுக்கி ஓடுகள்.

மதுரைக் கம்பனிவார் சிறந்த குடை அடையாளமிட்டு [illegible] ஓடுகளை வெகு பணிக்காய் அமைத்திருக்கிறார்கள் வெயில், மழை, செருப்புக்கு இதிலும் மேலான பாதுகாப்பு உபகரணம் வேறொன்றில்லை. பல தொழில் நிபுணர் பரிசோதனையால் இதன் இயற்கை மெச்சப்பட்டது இதுவரை 10 தங்க மெடல் பரிசுக்குக் கம்பனியாரைத் தகுதியுடையவராக்கிப் புகழ்பெற்றது மிக இலேசானது மலிவானது ஒவ்வொரு ஓட்டிலும் குடை அடையாளம் விளங்கும் காங்கேசன்துறையிலே கவமாகக் கட்டப்படும் அரசினர் சுகஸ்தான கட்டடங்களுக்கென இக்குடை அடையாளமுள்ள 55,000 ஓடுகள் பாவிக்கப்பட்டிருக்கின்றன.

இந்த இனத்திலே கண்ணாடி ஓடுகளுமுண்டு

ஜே. செருபிம் அன்ட் பிறதர்,
ஏசண்டர், பெரியதெரு, யாழ்ப்பாணம்.
(Y 981-31 12 31.)

## சாலாமிஸ்திரி லேகியம்,

இந்த லேகியத்தை யான் அநேக பிரபுக்களுக்குச் செய்து கொடுத்துப் பல வியாதிகளைக் குணப்படுத்தியதால் அவர்கள் மனமகிழ்ந்து வெகுமதிகளையும் கொடுத்திருக்கிறார்கள். இதை நான் விளம்பரத்தில் உலகோர்களுக்காகப் பிரசுரித்திருக்கிறேன். ஆனால் பிரபுக்கள் மாத்திரமல்ல ஏழைகளும் இதனாலுண்டாகும் சுகத்தை அடையும்படி பொதுஜன நன்மைக்காகவே இப்போது இந்த லேகியத்தைப்பற்றிப் பிரசுரித்து வருகிறேன்.

இது சாலாமிஸ்திரி, குங்குமப்பூ, ஜாதிக், கஸ்தூரி, குமாஸ்தாகா, பிதாரு, சாலாமுஸ்லி, சப்பேமுஸ்லி, பிஸ்தான், சார்ப்பருப்பு, பாதாமபருப்பு, சாத்தாவாரி, சீர்முனிவிதை, ஏலப்பூ வங்கபஸ்பம், அப்ரகபஸ்பம், பவளப்பஸ்பம், வெள்ளிபஸ்பம், அயகாந்த செந்தூரம் சங்கிராவணிப் பதங்கம் இன்னும் அநேக புஷ்டியான மூலிகைகளை சேர்த்துச் செய்யப் பெற்றிருக்கின்றது.

இதனால் கீழ்பிடிவு, சிக்கப்பெடு, சீரடைப்பு, மூலச்சூடு, தருணருதுத்துவ உண்டாகிவரும் மக்களாங்கு; இருமல், காசம் சித்தபிரமை, பித்தபாண்டு, பீனிசம் கைகால் காந்தல், வலி, இடுப்புவலி, பக்கவாய்வு இன்னும் அநேக கடுமையான வியாதிகள் தீரும். ஸ்திரீகள் இந்த லேகியத்தைச் சாப்பிட்டுவந்தால், மேற்சொன்ன வியாதிகள் சுகமடைவதுடன் ஜூதக வாய்வு, கர்ப்ப அறையில் உண்டாகும் நோய்கள் நீங்கு தேகபுஷ்டியும் பலமும் பெறுவார்கள். பால் விருத்தியாகும்.

இந்த லேகியத்தின் விலை ரூத்தல் ஒன்றுக்கு ரூபா ௨0. அரைரூத்தலுக்கு ரூபா ௧0. கால் ரூத்தலுக்கு ரூபா ௫ தபாற்செலவு பிரத்தியேகம்.

சிங்கப்பூர் பினாங்கு முதலிய தேசங்களிலிருந்து வி. பி. சட்டம் இல்லாததினால் முன்பணம் ஆடர் அனுப்புதல் வேண்டும்.

இங்ஙனம்,
க. ஆறுமுகம்பிள்ளை,
சிறுநாவலூர் ஆரோக்கியசகோதராவைத்தியசாலை
காத்தான்குடி போஸ்டு,
மட்டக்களப்பு,
இலோன்.

(Y.75. 31-12-31.)

Established 1909. A. S. M. A. Khader Brothers

மருந்தேயாயினும் விருந்தோடுண், என்ற ஒளவைப்பிராட்டியாருரைப்படி

இந்த விளம்பர முழுதும் தாங்களும் வாசித்து
தங்கள் சிநேகிதர்களுக்கும் வாசித்துக் காண்பியுங்கள்.

குளிக்கப்போய்ச் சேற்றைப் பூசிக்கொள்வதுபோல்
வீண் ஆரவாரமான விளம்பரங்களைக்கண்டு மிரண்டுவிடாதீர்கள்.

மாறுபாடில்லாதவுண்டி மறுத்துண்ணின்
ஊறுபாடில்லையுயிர்க்கு. (குறள்.)

தன்பமுறவத சம்முயிரேயாதலால் மூவகைத்தோஷத்தாலும் பிணியாதனவில் தடுப்பதற்காகிய நல்லவிதமாகிய அவிழ்தங்களை உண்டவர்களுக்கு பிணியால் துன்பமில்லையென திருவள்ளுவநாயனார் கூறிய திருக்குறளைபுணர்ந்த அறிவிற்சிறந்த அன்புடையோரே அருந்தக்கடவர்களாக.

## நாகங் கெட்ட தேகத்தைக் காக்கும்; நாட்பட்டரோகத்தைப் போக்கும்.

உங்கள பணத்திற்கும மருந்தின் குணத்திற்கும உத்தரவாதமளிக்கப்பட்டது.

கிகாற்றது! குணமுற்றது!! மகிழ்வுற்றது!!! புகழ்பெற்றது!!!!

## ஜீவானந்த தாது விர்த்தி லேகியம்.

ஓ! அன்பர்களே!! ஒருவனுக்கு வீரியத்தில் ஏதேனும் விகாரமுண்டாயிருக்கின் அவன் எவ்விதசந்தோஷத்திற்குரியவனாயினும் வீரியக்கெடுதலின் காரணத்தமாகவே அவன் மனதிற்கு மேலும மேலும் விசனத்தைததான் உண்டாக்கச்செய்யுமென்பது ஆயுர்வேத சாஸ்திரங்களின் துணிபும் தவிர, இராஜாங்க வைத்தியர்களாலும ஒப்புக்கொள்ளப்பட்ட விஷயம் அதுவே, நபுஸகம, அல்லது பேடித்தனமென்று சொல்லப்படும அவ்விதத்துக்ககரமான கொடிய வியாதியை அடியோடுதொலைத்து உலகின் வாழ்க்கையில் என்றைக்குமுத ஆரக்க சுகாதாரவிருத்தியடையச் செய்விப்பதில இந்த ஜீவானந்த தாது விர்த்தி லேகியமே மிகவுஞ் சிறந்தது. இந்த லேகியத்தின் முக்கிய குணமாவது: இளமைப பருவத்தில பற்பல துர்ச்செய்கைகளினால் சுபோயத்தில தேஹபலமகுன்றி நரம்புகள் தளர்வடைந்து இரத்தம கெட்டுப்போய் சந்தானவிர்த்தியில்லாமல வயோதிகர்போல் மயங்கிநிற்கும புருஷர்களும், வாதாதி மூவகை தோஷத்தால் உஷ்ணமுண்டாகி பிரமேகச்சூட்டால் நாதம் னது ஜலம்போல் நீறு, கைகாலசதி மலசிக்கல், பசியில்லாமை ஜீரணக்குறைவு, சித்திரபக்கமென்னும் ஸ்கலிதம், தாதுஸ்கலிதம், மூளையின்கொதிப்பு கண்ணெரிவு, தேகதனல் இடுப்புவலி நீர்க்கடுப்பு, நீர்எரிச்சல், நீர்சுருக்கு முதலிய சர்வரோகங்களையும், ரோய்களுக்குத் தக்கபடி 40, அல்லது 20 நாளில் பூரணமாய் சுகப்படுத்தி இரத்தத்தை சுத்திசெய்து தங்கள் தங்கள் சுபாவத்திற்கு மேலான வீரியத்தையும் மனவுற்சாகத்தையும உண்டாக்கி இரத்தவிர்த்தி, வீரியவிர்த்தி அறிவுவிர்த்தி, தேகசக்தி, சந்தானவிர்த்தி, முதலிய நலன்களை செய்வதில் இதுவே மேலானதென்றும் கடவுளுக்குப் பொதுவாய் உறுதியாகச் சொல்லுகின்றோம, அப்படி இதில் சருக்கமாய் காட்டியுள்ள குணாலத்திற்கு மேற்கொண்ட பலனையடையவில்லையென்று கடவுளுக்குப் பொதுவாய் சொல்லுகிறவர்களின்பணத்தை உடனே வாபீஸ செய்விக்கப்படும. அப்படி டிை பிரயத்தை கொடுக்கத் தவறினால் கோர்ட்டுமூலமாக வசூல் செய்து கொள்ளலாம மேலும இம் மருந்தின் குணாலத்தைப்பற்றிச் சந்தேகிக்கிறவர்கள், சமது மருந்தாலயத்திற்கு நேரிலவந்து தங்கள் தங்களுக்குரிய சந்தேகத்தை போதுமானவரையுமுள்ள விசாரணை செய்துகொண்டு வாங்கலாமென்பதாயும திண்ணமாய் கூறுகின்றோம்,

40 நாள் 80 வேளை டப்பி 1க்கு கிரயம ரூ 8 0 0
பரீட்சை 20 நாள் 40 வேளை டப்பி 1க்கு ரூ 4 0 0

வி பி தபால் சார்ஜ் பிரத்தியேகம, முற்பணமனுப்பினால் வி. பி. தபால் செலவு இனமாய் அனுப்பப்படும பினாங்கு, சிங்கப்பூர், சிலோன், ரங்கூன், கோலாலம்பூர் ஆகிய ஐக்கிய மலாய் நாட்டு வாசர்களும மருந்திற்கிரயமும தபால் செலவு ரூ 2ம சேர்த்து முற்பணமனுப்பி மருந்து பெறவேண்டும் டிை பிறதேசவாசர்கள் அட்வான்ஸ் அனுப்பினால், பாகல் தொகைக்கும் வி. பி. யில் அனுப்புவோம. ஆடர் செய்பவர்கள் இப்பத்திரிகையின் பெயரை குறிப்பிட்டெழுதவும்.

Our Sole Agent:
P. M. Abdulcader Esqs,
Ceylon Post Agency
No. 105, Piachaud's Lane, Maradana,
Colombo, Ceylon.

எமது விலாசம்:
☞ ஏ. எஸ். எம். ஏ. காதர் பிரதர்ஸ்,
கைறுல் முஸ்லிமீன் மெடிக்கல் ஹால்
பறங்கிப்பேட்டை, தென்னாற்காடு ஜில்லா,
இந்தியா.

(Y. 15. 6-7-31—6-7-32.)

# இந்துசாதனம்.

யாழ்ப்பாணம்: பிரசோற்பத்தி௵ கார்த்திகைமீ ௨௯௳ திங்கட்கிழமை.

## இங்கே மதுபான வெற்றிக்குக் காரணம்.

யாழ்ப்பாணப் பட்டினத்தில், பழையபடி கள்ளுக்கடை சாராயத்தவறணை அந்நியநாட்டுக் குடிவகைக் கடையெல்லாம் விரைவில் வரப்போகின்றனவே யென்பதையிட்டுப் பலர் பல விதமாக அபிப்பிராயப்படுகின்றார்கள். அயலவர்களாயுள்ள சிங்களர், யாழ்ப்பாணத்தார் மதுவேட்கை பெரிதுங் கொண்டமையினாற்றான், தாம் அறவே யொழித்த மதுபானத்தை மீளக்கைக்கொண்டனர் என்னுங் கருத்துப்படப் பத்திரிகைகளில் வெளியிடுகின்றனர். மதுபானத்திற்கு மாறாயுள்ளார் சிலர் மதுவிலக்குச் சங்கத்தாரின் அலட்சியத்தினாற்றான் பழையபடி மதுக்கடைகளெல்லாந் திறபட நேர்ந்தன வென்கின்றனர். அரசினர் சாராயத்தையும் அந்நியநாட்டுக் குடிவகையையும் யாழ்ப்பாணத்தில் ஒவ்வோர் காரணஞ் சொல்லி வரவிடுத்து, யாழ்ப்பாணத்துள்ள பனைகளிலிருந்து சேர்க்கப்படுங் கள்ளை மாத்திரம் ஒரு சொட்டும் இல்லாமற் பண்ணத்தக்க பிரமாணத்தை விதித்தமையினாற்றான் இங்குள்ளார் அரசினரின் கிருத்திரமத்தையுணர்ந்து பழையபடி எல்லா மதுபானங்களையும் வரச்செய்தனரென வேறு சிலர் சொல்லுகின்றனர்; அயலிலுள்ள சாவகச்சேரி பரித்தித்துறை முதலிய இடத்தில் சகாயமாகச் சாராயம் கள்ளு விலைப்படுமாமேன் அவைகள் பொருட்டு இந்தப் பஞ்சகாலத்தில் அநியாயமான விலைகொடுத்து வாங்கிக் குடிப்பான் என்று ஆத்திரங்கொண்டு இப்படிச்செய்தார்களென இன்னுஞ் சிலர் கூறுகின்றார்கள்; அரசினருடைய உதவி மதுபானத்திற்கு அநுகூலமாயும் எங்களுக்குப் பிரதிகூலமாகவுமிருக்க நாங்கள் மதுபானத்தை ஒழிப்பதெப்படி இங்கே குடியானவர் அரசினரோடு நீதியாகவேனும் நீதியீனமாகவேனும் எதிர்த்தும் எதுஞ் செய்ய முடியுமோ என்று ஒழித சிலர் சொல்லுகிறார்கள். இப்படி இவ்விஷயமாக இன்னும் பலவாறாகப் பேசிக்கொள்ளுகிறார்கள்.

மேலே சொல்லப்பட்ட ஏதுக்களுள் யாழ்ப்பாணத்தவர் இப்பொழுது மதுவேட்கை அதிகங் கொண்டுவிட்டனர் என்ற ஒரு காரணத்தைத் தவிர ஏனைய காரணங்களெல்லாம் பொருத்தமுடையன என்றே சொல்லுதல்வேண்டும். இவற்றுள்ளும் அரசினர் மதுபானத்திற்கு எல்லாவகையாலும் அநுகூலமாக நின்றமையினாலேயே மதுபானம் வெற்றியடைந்ததென்பதை எவரும் மறுத்தல் முடியாது. இற்றைக்குச் சில வருடங்கட்கு முன்னர் இங்குள்ள மதுநீக்கும் அபிமானிகள் பெரும் பொருள் செலவிட்டும் படாத பாடெல்லாம்பட்டும் எல்லாவகையான மதுபானக் கடைகளையும் அறவே தவிர்த்தபோது, மதுநீக்க அபிமானிகட்கு அரசினர் சனச் சம்மதம் பெற்றுப் பழையபடி இந்த மதுக்கடைகளைத் திறப்பதற்கான வழிகளை அநுசரித்தலுங்கூடும் என்ற எண்ணம் எள்ளளவுமிருந்ததல்ல. அக்காலத்தில் மதுக்கடைகளை நீக்கியபோது, அவைகள் அன்றோடு தொலைந்தனவென்றே இங்குள்ள அபிமானிகளும் சாமானிய சனங்களும் இறுமாந்திருந்தனர். அது ஏமாற்றாக முடிந்தது; இனி அரசினர் அபின் கஞ்சா விஷயத்திற் கட்டுப்பாடாக இருக்குந் தன்மைபோல் கள்ளில் மாத்திரம் கட்டுப்பாடாகவிருந்து கொண்டு, சாராயம் அந்நியநாட்டுப் பானங்கள் விஷயத்தில் அவை இங்கு வரத்தக்க பிரமாணங்களை விதித்து விட்டனர்; இச்செயல் கள்ளுக்கு விரோதமாக நின்றவர்கள் மனதையும் ஆத்திரமுறப்பண்ணி மதுபானமெல்லாவற்றையும் பழையபடி இங்கு வரச்செய்தற்கு ஏதுவாயிற்று.

இனி, மதுபானக் கடைகட்குச் சனங்கள் சம்மதம்சொல்லும் விஷயத்திலும் இங்குள்ள மாகாணத் தலைவர் மதுபானத்தின் சார்பில் நின்றாரென்று, அவர் அச்சமையத்திற் செய்த சில செயல்களைக்கொண்டு சொல்லவேண்டியிருக்கின்றது. யாழ்ப்பாணத்தில் முன்னர் பிறண்டிச்சாப்பிற்குச் சொந்தக்காரனாயிருந்த ஒருடையாரை, சம்மதஞ் சொல்லுவோரின் பெயர்களைப் பதிவதற்கு மாகாணத்தலைவர், மதுநீக்குஞ் சங்கத்தார் தடுத்ததையும் பொருட்படுத்தாது நியமித்துவிட்டாரென்று சொல்லப்படுகிறது. சம்மதஞ் சொல்லுந் தானத்திலிருக்குங் கிளார்க்மார், சம்மதஞ் சொல்ல வருவாரின் வயதையும் ஒட்டிப் பார்த்து அவர்தானோ இல்லையேல் போலியாக வந்தவரோ என்பதை அவதானிக்க வேண்டுமென்ற நியதியிருந்தது. அப்படிச் செய்யுமவண்ணம் கிளார்க்மாருக்கு மாகா

(தொடர்ச்சி 4-ம் பத்தி.)

## ஜெனிவாவில் மஹாத்மாவின் பிரசங்கம்.

### வலாற்காரமின்மை.

ஜெனீவா 10 12-31.

சமாதானத்தையும் சுதந்தரத்தையும் பரிபாலிக்கும்பொருட்டு நிறுவப்பட்ட சர்வதேச மாவீர்சங்கத்தின் ஆதரவில், ஜெனீவாவிலே விக்டோரியா மண்டபத்தில், எல்லா வகுப்பினருமாக 2000 சனங்கள் கூடியிருந்த ஒரு பகிரங்கக் கூட்டத்திலே மஹாத்மா ஒரு பிரசங்கஞ் செய்தனர்.

இந்தியாவிலே சாத்விகப்போராட்டத்தினால் இந்தியா அடைந்த அநுபவத்தைப்பற்றி மஹாத்மா எடுத்துக்கூறிய அதே வழியை ஜெனீவாவிலுள்ள அகில அரசாட்சிச்சங்கத்தாரும் அநுசரணை செய்வது நலம் என்று குறிப்பிட்டனர்.

சுவிற்சர்லண்டிலே, ஆயுதங்களை அகற்றிவைத்தல் வேண்டுமென்னும் முறை அநுசரிக்கப்படுவதுபோல் மற்றைய வல்லரசுகளும் அம்முறையை அநுசரணை செய்வது நலம் என்றனர்.

சேனையிற் சேருமாறு ஆட்களை வலிந்திழுப்பதிலும்பார்க்கச் சாத்விகப் போரிற் சேருமபடி செய்வது கடினமாகும் எனவும் கூறினர்.

மஹாத்மா பிரசங்கஞ்செய்த மண்டபம், ஜெனீவாவிலே குடியிருந்த ஒரு ஆங்கிலேயரினால் கட்டுவிக்கப்பட்டது. அதிலே மஹாத்மா வழக்கம்போல ஒரு மேசையின் மீது காலைமடக்கிக்கொண்டு அட்டணைக்காலேறிட்டு (சுகாசனம்) இருந்தனர். அவருக்குப்பின்புறத்தில் சுவரிலேயிருந்த் ராணிய அதிகார முத்திரை தூக்கப்பட்டிருந்தது; ஏனெனில் இம்மண்டபம் அதனைக் கட்டுவித்தவரினால் விக்டோரியா இராணியாருக்கு அர்ப்பணஞ் செய்யப்பட்டது.

பிரத்தியேகமான பொலிஸ் பாதுகாப்புக்கள் நிறுவிக்கப்பட்டிருந்தன. மண்டபத்தின் அயலிலேயுள்ள தெருக்கள் எல்லாம் கயிறு கட்டி மறிக்கப்பட்டிருந்தன. ஆனால் எல்லாம் மனோகரமாகவே நடந்தேறியன.

வில்லநூவ் 11—12—31.

மஹாத்மா இங்கு தங்கியிருந்தகாலத்தில் நடந்த சம்பவங்களுள், இரண்டு சிறுவர் ஆங்கிலக்கலாசாலைமாணவர்கள் மஹாத்மாவை வரவேற்றபொழுது 'கடவுள் அரசனைக் காப்பாராக' (கோட், சேவ், தி கிங்) என்ற பதத்தைப்பாடினமை ஒன்றாகும். மற்றொன்று, இதே கொத்தின மாணவர்கள் மஹாத்மாவை யழைத்து வைத்துக் கொண்டு அவரின் வழிமுறைகளைப்பற்றிப் பிரசங்கஞ் செய்தமை.



ரோன பள்ளத்தாக்கிலே, லெசிபபி என்னும் கிராமத்திலே 80 வயதுடைய ஒரு மாது இருக்கின்றனர். இவர் மஹாத்மாவின் காரியதரிசியாகும் மிஸ். ஸ்லேட் என்பாரின் ஒருபழைய சிநேகிதி. இவ்வயோதிகமாது கைநெசவுசெய்வதை மஹாத்மா பார்த்து அதிகம் மனோற்சாகமடைந்தனர். இங்கே கக்கைக் கிலனைக்கொண்டு பாய்கள் நெசவுபண்ணப்படுவது மஹாத்மாவின் அவதானத்தைக் கிரகித்தது. அவருஞ் சொற்ப நேரம் இந்த நெசவைச்செய்துபார்த்தனர். டிசெம்பர்மீ 28உ இந்தியாவுக்குவந்துசேருவதாகக் காத்திருக்கின்றனர்.

இன்று சாயந்தரம் 2-37க்கு மஹாத்மா ஒதுபிரத்தியேகப்படுத்தப்பட்ட மூன்றாம் வகுப்பு வண்டியிலே புகைரதமார்க்கமாகப் பிறிண்டிசிக்குப் போகும்வழியில் ரோமாபுரிக்குப் பிரயாணமானார். பெருந்திரளான நேசர்களும் அவ்விடத்தின சனங்களும் அவருக்குச் சிநேகாயாதத்தை கூறி வழியனுப்பினர்.

மிஸ்டர் லாயிட் ஜார்ஜ் காந்தியடிகளைப்பற்றித் தற்போது பம்பாயிற் கூறியது:--

"நான் அரசியல் வாதியானமையால் காந்திஜியும் அரசியல் வாதியாக இருப்பதைக் கண்டுகொண்டேன். அரசியல் விஷயமாக என் மனதில் நல்ல எண்ணம் ஒன்று ஆழ்ந்தமாகப் பதியும்படி அவர் செய்துவிட்டார். அவர் மிகுந்த மனோதிட்பமுடையவர். 3½—மணிநேரம் அவருடன் நான் சம்பாஷித்ததிலிருந்தும், இந்தியாவின் கொட்கையை அவர் அருமையாகச்சொல்லியதிலிருந்தும் அவர்மிகுந்த சாதுரியம் வாய்ந்த ராஜதந்திரி என்பதையும் தெரிந்துகொண்டேன்.

## காந்திஜிக்கு சாஸ்திரி வேண்டுகோள்.

சென்றமீ 30உ இரவு லண்டன் சர்வகட்சிமகாநாட்டுப் பூரணக் கூட்டத்தில் காந்திஜி, மாளவியா முதலியோர் பேசியபின்னர் கனம். சீனிவாசசாஸ்திரியார் பேசுகையில் காந்திஜிக்குப் பின்வரும் வேண்டுகோள் செய்துகொண்டார்:—

"நீங்கள் மனமுடைந்து திரும்பிப்போய் ஒத்துழையாமைப் போராட்டத்தைத் தொடக்கிவிட வேண்டாம். தங்கள் பணி எங்களிடத்தானிருக்கிறது. நீங்கள் ஒப்புயர்வற்ற புகழ்பெற்று விட்டீர்கள்.

(1-ம் பத்தித் தொடர்.)

ணத்தலைவர் இம்முறை சொல்ல மறுத்துவிட்டாரென்றும் சொல்லப்படுகிறது. இப்படியே விதானைமாரும் சம்மதஞ்சொல்லவரும் ஆட்களை இன்னாரென்று குறிப்பதற்குப் பின்னின்று விட்டனராம். சுருங்கச் சொல்லுகில் ஆள்மாறிவந்து சம்மதஞ்சொன்னவரையும், பலமுறை வந்து சம்மதஞ்சொன்னவரையுங் கண்டிப்பதற்கான எவ்வகையான கட்டுப்பாட்டையும் இந்த விஷயத்தில் மாகாணத்தலைவர் செய்யவில்லையென்ற அபிப்பிராயம் மதுநீக்கும் அபிமானிகளிடத்திற் பெரிதுமிருக்கின்றது. இனி, சம்மதஞ்சொன்னவர்கள் விகிதம் நூற்றுக்கு 70 ஆனதற்குக் காரணம் மாகாணத்தலைவரின் அலட்சியத்தாலும் மதுச்சார்பாலும் நேர்ந்ததென்பதும் உண்மையாக முறைப்படிசம்மதம்பெறுவதானால் நூற்றுக்கு 30 விகிதம் வரையிற்றான் யாழ்ப்பாணப்பட்டினத்திற் பெறுதல்முடியுமென்பதும் இங்குள்ளாரெவரும் அறிந்த இரகசியம்.

இப்படித்தவறான மார்க்கத்தினால் மதுபானம் பழையபடி யாழ்ப்பாணப்பட்டினத்தில் வந்து புகுந்ததென்று சொல்வதேயல்லாம் யாழ்ப்பாணத்தார் முன்னரைக்காட்டிலும் இப்பொழுது அதிக மதுவேட்கை கொண்டுவிட்டனரென்று சிங்களரும் ஏனையோரும்சொல்வது சிறிதும் பொருந்தாது.

### கால நிலை.

மழை இரண்டு மூன்று தினங்களாகச் சிறிது வெளித்திருக்கின்றது.

### திருவெம்பாவைப் பூசை.

மார்கழிமீ 1-ம் தேதியாகிய வருகிற புதன்கிழமை (16-12-31) அதிகாலை திருவெம்பாவைப் பூசை ஆரம்பமாகின்றது. அன்று தொடக்கி 10 நாட்களிலும் சைவசமயிகளாயுள்ளார் வைகறையி லெழுந்து கடன் முடித்து ஆசாரசீலராய், அபிடேகம் பூசைகட்குரிய திரவியங்களையுங்கொண்டு ஆலயத்திற்குச்சென்று சுவாமி தரிசனஞ் செய்து திருவெம்பாவைப் பாராயணம் திருவாதவூரடிகள் புராணபடனம் முதலியனவற்றைச் சிரத்தையோடு செய்துங் கேட்டும் நன்மைபெறுவார்களாக.

### இந்திய சங்கீத சாஸ்திரம்.

வண்ணார்பண்ணையிலே, பிரப்பங்குளத் தெருவிலே ஸ்தாபனம் பண்ணப்பட்டிருக்கும் 'கலா நிலையம்' என்னும் புராதன நூற்களஞ்சிய மண்டபத்திலே மேற்குறித்த விஷயத்தைப் பீடிகையாகக் கொண்டு, இராமநாதன் கல்லூரி ஆசிரியர்களுள் ஒருவரான பிரமஸ்ரீ C. S. கணபதி ஐயர் B. A. அவர்கள் (15-12 31) செவ்வாய்க்கிழமை மாலை 6 மணி தொடக்கம் ஒரு விரிவுரை நிகழ்த்துவார்களென, கலாநிலையக் காரியதரிசி தெரிவிக்கின்றனர்.

மக்களை நடத்தவும், அவர்களை உய்விக்கவும் உங்களுக்குள்ள தெய்வீக சக்தியை உலகம் ஒப்புக்கொள்ளுகிறது. உங்கள் சொற்படி நடக்கும் மக்களை [illegible] இன்னல்களுக்கானாலும் உங்களுக்கு மனமுண்டா? இந்த [illegible] அநுபவிக்கவேண்டிய அவசியமில்லையென்றே நானுகருதுகிறேன். வேறெந்த [illegible] உங்கள் கையிலுள்ள இந்தியாவின் முன்னேற்றமிருக்கிறது. நாங்களும் உங்களுக்கு உபயோகமாக இருப்போம். எங்களையும் ஏற்றுக் கொள்ளுங்கள். [illegible] சேர்ந்து நாமசேரும் முறையில் இந்தியாவின் அரசியல் அமைப்பை அமைக்கலாம் [illegible] தேசசரித்திரங்களை வசித்திருக்கிறேன். பிரிட்டிஷார் அடிக்கடி தவறுகளையும், புத்தியற்ற முறைகளையும் கையாண்டாலும் நாட் செல்லச் செல்ல [illegible] அறிவுபெற்று [illegible] உணர்கிறார்கள். சாம்ராஜ்யத்திலுள்ள [illegible] நாடுகளுடன் [illegible] சமநிலைமையிலிருக்க வேண்டுமென்று இந்தியா விரும்புகிறது. பிரிட்டிஷார் தாராள நோக்கத்துடன் நடந்துகொள்ளவேண்டும்.

### டாக்டா ஒயிஸ் கருத்து.

நியூயார்க் நகரத்திலுள்ள கார்னகி மண்டபத்தில் 31-10-31ல் ரெவரெண்ட் டாக்டர் ஸ்டீபன் இ - ஓயிஸ் என்னும் பெரிய பாதிரியார் ஒரு பிரசங்கம் செய்தார். அது காலை காந்தியடிகளைப்பற்றி அவர் குறிப்பிட்டதாவது:—

விவிலிய நூலில் காணப்படும் பெரிய மகான்களான மேலவ் [illegible] சமமாகவே இந்தியாவில் தோன்றியுள்ள காந்தியடிகளைக் கூறலாம், இந்த மகான்கள், தங்கள் ஜனங்களின் முன்னேற்றத்திற்காகவே பாடுபட்டார்கள். இப்பொழுது உலகத்துப் பெரிய மனிதர்களின் தலைவராக விளங்கும் மகாத்மாகாந்தி மேனாட்டில் தோன்றாமல் கீழ்நாட்டில் தோன்றினார் என்பதை அறிந்து நாம் பெருமை [illegible] வேண்டும். அதே சமயத்தில் நமமையறிய மலே நமக்குப் பணிவும் உண்டாகிறது. நாம் சுமார் இரண்டாயிரம் [illegible] மேனாட்டிலேயே [illegible] வந்தவராயினும், கீழ்நாட்டிலே தோன்றிய இச்

தச் பெரியாரிடத்தில் பக்தி விசுவாசம் உண்டாகிறது. உயரிய மதத்தின் அவதாரமாக விளங்கும் இந்த மகாத்மாகாந்தி, பூதமதத்தையோ, கிறிஸ்தவ மதத்தையோ இஸ்லாம் மதத்தையோ சேர்ந்தவரல்ல. கிழக்குப் பிரதேசங்களின் மதங்களில் மிக உயரியதும், மேனாட்டினரால் சிறிதளவே அறியப்பட்டதுமான ஹிந்து மதத்தைச் சேர்ந்தவரே.

## ஹோம்ஸ் பாதிரியாரின் கருத்து.

அமெரிக்கரின் பிரபல பாதிரியாரான ரெவரெண்ட் ஜான்ஹேய்ன் ஹோம்ஸ் என்பார், காந்தியடிகளிடத்தில் அரிய பக்தி பூண்டொழுகுபவர் என்பது நேயர்களுக்குத் தெரியும். இவர், காந்தியடிகள் லண்டனுக்கு விஜயஞ் செய்தது முதல் அவருடன் கூடவே இருந்தார். முதன் முதலாகக் காந்தியடிகள் இங்கிலீஷ் கால்வாயைக்கடந்து வோக்ஸ்டோன் ஸ்டேஷனை வந்தடைந்தபோது, அவரை வரவேற்றவர்களில் ஹோமஸ் பாதிரியாரும் ஒருவர். ரெவரெண்ட் ஹோமஸ் அமெரிக்காவுக்குச் சென்று, காந்தியடிகள் சம்பந்தமாகத் தாம் நேரில் கண்ட காட்சிகளனைத்தையும் குறிப்பிட்டு ஓர் உபந்நியாசம் செய்திருக்கிறார். அதன் சாரம் வருமாறு:—

மகாத்மா காந்தி, இங்கிலிஸ் கால்வாயைக் கடந்து, இங்கிலாந்தின் எல்லையை மிதித்தது எப்படியிருந்தது? ஜூலியஸ்ஸீஸர் இங்கிலாந்தின் மீது படையெடுத்து வருவதுபோல் இருந்தது. அநேக ஆயிரம் வருஷங்களுக்குப்பிறகு நோமண்டியைச் சேர்ந்த வில்லியம் அரசர் படையெடுத்து வந்ததுபோல் இருந்தது. ஆயிரம் வருஷங்கள் கழிந்த பிறகு, மறுமுறைபேர் வீரர் கடலைக் கடந்து இங்கிலாந்தை நண்ணினர். இவரிடத்திலே இரும்பினாலாய வாளாயுதம் இல்லை. ஆனால் ஆன்மசக்தியே இவருக்கு ஆயுதமாக இருந்தது. இங்கிலாந்தை அழிக்க இவர் வரவில்லை. ஆனால் ஆங்கிலேயருடைய மனதைக் கைப்பற்ற இவர் வந்தார். இங்கிலாந்துக்குக் கஷ்டகாலம் ஏற்பட்டிருக்கிறதென்று அஃது இப்பொழுதுதான். சென்ற இரண்டாயிரம் வருஷங்களுக்குள் மூன்றும் முறையாக ஓர் அந்நியர்வந்து சமாதானவுடன் படிக்கை இனமாதிரியாக இருக்கவேண்டுமென்று குறிப்பிட்டிருக்கிறார். லண்டனுக்கு முதன் முதலாக அவர் வந்ததும், ஜனபூர்வ சங்கத்தினர் அவருக்கு உபசாரஞ் செய்தனர். அப்பொழுது நான் ஆஜராயிருந்தேன். ஒரு சக்கரவர்த்தியின் சந்நிதானத்தில் நமக்கு என்ன மரியாதை உண்டாகுமோ அதைவிட அதிகமாகக் காந்தியடிகளின் முன்னிலையில் நமக்கு உண்டாயது. காந்தியடிகளின் கம்பீரத்தின் முன்னர், மன்னர்களின் கம்பீரம் எம்மாத்திரம்? சர்வகட்சி மகாநாட்டினால் வெற்றி உண்டாகாதென்றே அவர் கடைசிவரையில் நம்பியிருந்தார். ஆனால் அவர் கூறியதென்ன? "ஆண்டவன் என்னை இங்கிலாந்துக்கு வரும்படி கூறினார். அதற்குரிய காரணங்களை அவர் வைத்துக் கொண்டிருக்க வேண்டும். ஆதலின் கடைசிவரை நம்பிக்கையுடனிருக்க வேண்டுமென்றே தீர்மானித்திருக்கிறேன்" என்று அவர் கூறினார். பத்திரிகைகளில் அவரைப்பற்றிப் பொய்யான செய்திகள் வெளிப்பட்டபோது, அவர் பின்வருமாறு கூறினார்:— "இதனால் எனக்குத் துன்பம் உண்டாகவில்லை; ஆனால் எனக்கு மன வருத்தமே உண்டாகிறது. பத்திரிகைப் பிரதிநிதிகளிடத்தில் நான் எப்படி மனம்விட்டுப் பேசியிருக்கிறேன் என்பது உங்களுக்குத் தெரியும். எல்லாவற்றையும் அவர்களுக்கு நான் விட்டுக் கூறியிருக்கிறேன். அப்படியிருந்தும் பல விதமான பொய்ச் செய்திகளை இவர்கள் வெளியிடுகிறார்கள். ஆனால் இவைகளினால் எனக்கு எவ்வித மனத்தாபமும் இல்லை. சத்தியத்தைத் தினமும் சேவிப்பது ஒன்றுமில்லை யல்லவா?"

காமன்ஸ் சபையில் அடிகள் நிகழ்த்திய சொற்பொழிவைப் பற்றியும் அப்பொழுது கேட்கப்பட்ட கேள்விகளுக்கு அடிகள் கூறிய பதிலைப்பற்றியும் டாக்டர் ஹோமஸ் கூறியதாவது:— "காந்தியடிகள், தமது உபந்நியாசத்தை முடித்துக்கொண்ட பிறகு இரண்டு மணி நேரம் பல கேள்விகள் கேட்கப்பட்டார். ஒருவரை வேட்டை நாய்கள் துரத்துவதுபோல இவர் பல கேள்விகளால் துரத்தப்பட்டார். ஆனால் ஒரு சமயம் கூட அவர் தவறவில்லை. ஒருமுறை கூட சோர்வில்லை. அனைவருக்கும் அவர் இனியவராகவே இருந்தார். கடைசியில் அவர் வெற்றி பெறுவதற்கு அறிகுறியாய், எதிர்காலில் உண்டாகும்படியாக அனைவரும் கரகோஷம் செய்தனர்."

## தந்திச் செய்தி.

லண்டன் 11-12-31.

பெர்மா, வட்ட மேஜை சபை அக்ராசனராயிருக்கும் லேட்பீல், பெர்மாவுக்குத் தற்போதைய பாதுகாப்புகளுடன் மத்தியப் பொறுப்பாட்சியுள்ள ஒரு சுயவாட்சியமைப்பைச் செய்வது அரசாட்சியாரின் கருத்தெனக் கூறினார். பிரதிநிதிகள், முழு விஞ்ஞாபனத்தையும் பார்ப்பதற்குமுன் எவ்வித முடிவும் கூறாது விடுவது யுக்தமென வாளாவிருந்தனர்.

சென்னை 11-12-31.

வில்லட்டிக் குளத்திற்குச் சமீபமாக வைப்பாறைக்கடந்து செல்லுகையில் தடாகவிழ்ந்து 20 பேர் வரையில் மோசம் போயினர். ஓடத்தற செனறவரில்லனகா சாடார்கள்.

தென்னிந்தியப்புகையிரதப்பாதையின் தெற்குப் பாகத்தில், பெருமழை காரணமாக அநேக உடைப்புகள் ஏற்பட்டிருக்கின்றன. திருநெல்வேலியிலிருந்து புகையிரதப் போக்கு வரவு தடைப்பட்டது. இன்று சாயந்தரமே ஒரு புகையிரதம் நேரே வரக்கூடியதாயிருந்தது.

ரோகியோ 11-12-31.

யப்பானிய மஹாமந்திரசபை அரசாட்சியினின்றும் தாம் விலகுவதாகச் சக்கிரவர்த்திக்குத் தெரிவித்துவிட்டனர். புதுத் தேர்தல் நடைபெறும். அப்படி புதிய மஹாமந்திர சபை வந்தபோதிலும் சிறு விஷயமாக எவ்வித மாறுதல்களும் உண்டாகாதெனச் சொல்லப்படுகின்றது.

லண்டன் 10-12-31.

இந்தியாவிலே, வங்காளத்திலே தேசிய மஹாநாட்டார் பஹிஷ்கார இயக்கம் தொடங்குவதாகத் தீர்மானித்திருப்பதை இந்திய அரசாட்சியார் தெரிவித்திருக்கின்றனரோவென, கப்டின் ஹாக்கிஸ், பாராளுமன்றத்திலே வினவினார்.

தமக்கு அறிவிக்கப்பட்டதென்றும், வங்காள மாஹாண மஹாநாட்டுச் சபை இன்னும் அந்தத் தீர்மானத்தை ஆதரிக்கவில்லையென்றும் அப்படியான தீர்மானம் உண்டாகுமேல் அது டெல்லி உடன்படிக்கையை மீறினதாகுமென்றும், சேர் சாமுவல் ஹோர் பதிலுரைத்தனர்.

லண்டன், இந்தியச் சங்கத்தின் அங்கத்தவர்களும்; வர்த்தகக் கைத்தொழிற் சங்க அங்கத்தவர்களும், லான்ஸாஷயர், செஸ்ஸஷயர், வெஸ்ற் மூர்லண்ட் கூட்டத்தாரும் இன்று இந்திய மந்திரியாரைச் சந்தித்து, லான்ஸாஷயரில் உள்ள ஒரு நிபுணர் உட்பட, வர்த்தக வியாபாரச் சங்க ஒன்று இந்தியாவுக்கு அனுப்பப்படல் வேண்டுமென்று கேட்டனர்.

லண்டன் 10-12-31.

இந்தியாவைப்பற்றிப் பாராளுமன்றத்தின் பொதுஜன சபையிலே முதன் மந்திரியார் சமர்ப்பித்த அச்சபையின் அபிப்பிராயத்தினால் அங்கீகாரம்பண்ணப்பட்ட விஞ்ஞாபனம் மறுநாள் பட்டவர்த்தனர் சபையில் ஆலோசனை செய்யப்பட்டது. லோட் மிட்டிலான் இவ்விஞ்ஞாபனத்தைப்பற்றி ஆலோசனை செய்வதை அடுத்த பெப்ருவரி வரையில் தள்ளிப்போடவேண்டுமென ஒரு பிரேரணை செய்தனர். இப்பிரேரணை 58க்கு எதிராக 106 பேரினால் நிராகரிக்கப்பட்டது. ஆகவே, அவ்விஞ்ஞாபனம் எவ்வித திருத்தமுமின்றிப் பட்டவர்த்தனர் சபையாராலும் அங்கீகாரம் பண்ணப்பட்டது.

இந்தியாவுக்கு இராசாங்கராச் சுயவாட்சி கொடுக்குமுன் மற்றைய இராசாங்கராச் சுயவாட்சி நாடுகளைக் கலந்துகொள்ளவேண்டுமோ வெனப் பொதுசன சபையிலே கிளப்பப்பட்ட ஒரு வினாவுக்கு, முதன் மந்திரியார் மறுமொழியாக எந்த நாடும் அவ்வித ஆட்சி முறையைப் பெறுங் காலத்து மற்றைய நாடுகள் எவ்வித ஒழுங்குகளுடன் பெற்றனவோ அவ்விதமே அந்நாடும் பெறவேண்டுமென டிசம்பர் 2௨ தாம் கூறியிருப்பதாகப் பதிலுரைத்தார்.

சேர் T. B. சப்புரு; சேர் P. பட்டாணி; மிஸ்டர் ஜெயக்கர்; மிஸ்டர் குஸ்ரவி; சோ அபுல் குவாயம்; ஆகியோர் உட்பட அநேக வட்ட மேஜை பிரதிநிதிகள் இன்று விக்டோரியா ஸ்தானத்திலிருந்து மார்சேயிலஸ் துறைமுகத்துக்குப் புறப்பட்டனர்.

ஒஸ்லோ 10-12-31.

இவ்வருடத்திலே சமாதானத்திற்காகக் கொடுக்கப்பட்ட நோபெல் வெகுமதி, சர்வதேச சமாதான சங்கத்து அக்கிராசனராகும், மிஸ் ஜேன் ஆடமஸ் என்னும் பெண்ணுக்கும்; கொலம்பியா சர்வகலாசாலைத் தலைவா, டக்டர் நிக்கொலாஸ்—முறே-பட்லர் என்பாருக்குமிடையே பகிடப்பட்டது. இவர்கள் இருவரும் அமெரிக்கர்.

## பிற்செய்தி.

ரோம—12 12-31.

இன்று காலை 8-30-க்கு காந்தி வந்தார் இத்தாலி நாட்டின் ஆகாயதப் பகுதித் தலைவர் முனனிருந்த, தனாரத்தர் மெறிஸ் என்பாருடன் அவர் தங்குவார். பாப்பாண்டவரை அவர் சந்திப்பாரெனத் தோற்றவில்லை. ஏனெனில் ஞாயிறுக்கிழமைகளிலும், சாயந்தரங்களிலும் பாப்பாண்டவர் எவரையும் வரவேற்பதில்லை.

மிலான்—12-12-31.

புகையிரதம் இந்த ஸ்தானத்திலே மெல்ல வரத் தொடங்க மஹாத்மா தனது வண்டியின் சாளரத்தைத் திறந்து அங்கு கூடினற சிறுதொகைச் சனக்கூட்டத்தைக் கையை அசைத்தனர், இந்த இடத்திலே யூஸன் ஸ்தானாதிபதி காந்தியாருக்கு ஒரு முதல் வகுப்பு வண்டியை இறைமாக அளித்தனர் காந்திஜீ அதை ஏற்று அவ்வண்டியிலூட பிரவேசித்தார்.

ரோம்—12-12-31.

மஹாத்மா வந்துசேரும் சோதனைப்பற்றிய ஒரு தப்பு அபிப்பிராயத்தினால் அவரை வரவேற்றற்குத் தனாதர் மெறிஸ வரச் சென்று விட்டது மஹாத்மா ஸ்தானத்தில் இறங்கினற பொழுது அங்கு கூடியிருந்த சனக்கூட்டம் சந்தோஷ ஆரவாரஞ் செய்தது.

மஹாத்மாவுடனகலந்தரய்ட்டர்பிரதிநிதிக்கு அவர், 'மஸ்ஸோலினி'யைச் சந்திப்பதாகத் தாம் காத்திருக்கவில்லையென்றும், பாப்பாண்டவரைச் சந்திப்பதாக நம்புவதாகவும், இத்தாலியிலே தாம் அமைதியாகத் தங்காலத்தைப போக்க எண்ணியிருப்பதாகவும் கூறினார்.

நாளைக்கு அவர் 'பிறின்டிஸி'க்குப் பிரயாணமாவார்.

## மார்கழிமாத விசேஷ தினங்கள்.

| | | | |
|---|---|---|---|
| கஉ (16-12-31) | புதன், உதயத்தின் முன் திருவெம்பாவைப் பூசை ஆரம்பம் | கசுஉ (31-12-31) | வியாழன், இயற்பகை நாயனார் குருபூசை |
| சஉ (19-12-31) | சனி, வாயிலார் நாயனார் குருபூசை | கஎஉ (1-1-32) | வெள்ளி, 1932-ம் ஆண்டுப் பிறப்பு |
| ருஉ (20-12-31) | ஞாயிறு, வைகுண்டஏகாதசி | ககஉ (3-1-32) | ஞாயிறு, மானக்கஞ்சாற நாயனார் குருபூசை |
| எஉ (22-12-31) | செவ்வாய், பிரதோஷ விரதம்; கார்த்திகைவிரதம் | உகஉ (5-1-32) | செவ்வாய், பிரதோஷ விரதம் |
| கூஉ (24-12-31) | வியாழன், பூரணைவிரதம் | உஙஉ (7-1-32) | வியாழன், அமாவாசை விரதம்; சாக்கிய நாயனார் குருபூசை |
| ௱உ (25-12-31) | வெள்ளி, நடேசர் ஆர்த்திராதரிசனம் சடைய நாயனார் குருபூசை | உசுஉ (10-1-32) | ஞாயிறு, கர்ப் போட்ட நிவிர்த்தி. |
| கஙஉ (28-12-31) | திங்கள், கர்ப்போட்டஆரம்பம் | | |

## அடைவுநகை விற்பனவு விளம்பரம்.

1893-ம் ஆண்டின் 8-ம இலக்கக் கட்டளைச்சட்டத்தின்படி லைசென்ஸ் பெற்று அடைவு பிடிக்கும் சாவகச்சேரி வீ. இராமலிங்கம் அவர்களிடம் அடைவுவைக்கப்பட்டு இப்போது தவணை தப்பி மேற்படி சட்டத்தின் 12-ம் பிரிவின்படி பிரசித்த ஏலத்தில் விற்கப்படவேண்டிய நகைகளின் விபரம்:—

| இல. | திகதி. | ரூபா. | ஊர் பெயர் நகைகளின்விபரம். |
|---|---|---|---|
| 111 | 12-4-30 | 11 | சாவகச்சேரி காசித்தம்பி சபாபதி ½பவுண் 2 |
| 121 | 17-5-30 | 7 | சாவகச்சேரி சின்னத்தம்பி சின்னத்துரை மோதிரம் 1 |
| 132 | 21-5-30 | 40 | சாவகச்சேரி அம்பலவாணர் கந்தையா முறிச்சக்குத்தி அட்டியல்1 |
| 160 | 29-5-30 | 50 | கைதடி தனுவில் கனகர் கார்த்திகேசு முறிச்சக்குத்தி அட்டியல்1 |
| 220 | 14-6-30 | 55 | கொடிகாமம் க. முருகேசு பீலிக்காப்பு சோடி 1 |
| 314 | 8-7-30 | 40 | சாவகச்சேரி தம்பையா பெண் அன்னப்பிள்ளை கடுக்கன்3 வாளி சோடி1 |
| 325 | 10-7-30 | 25 | சாவகச்சேரி தா மு வல்லிபுரம் வெளிகாப்பு சோடி1 |
| 385 | 22-7-30 | 15 | மட்டுவில சரவணப்பிள்ளை கந்தையா கமல் சோடி1 |
| 408 | 28-7-30 | 35 | சாவகச்சேரி முருகர் சுப்பையா கம்பிப்பூரானட்டியல்1 |
| 418 | 29-7-30 | 16 | புலோ தம்பிப்பிள்ளை நாகலிங்கம் பென்த விக்கொடி1 |
| 424 | 30-7-30 | 30 | சாவகச்சேரி T. S. எட்மன் சவிலி1 பவுனுடன் |
| 426 | 30-7-30 | 90 | சாவகச்சேரி செலுஸ்தின் யோன் வைரக்காப்பு சோடி1 |
| 428 | 31-7-30 | 41 | சாவகச்சேரி சின்னையா பொன்னுத்துரை அமெரிக்கன்டலர்2 கவுத்து1 |
| 456 | 5-8-30 | 12 | நுணுவில சின்னத்தம்பி மார்க்கண்டு புறா1 |
| 458 | 12-8-30 | 30 | கைசாவல ஆறுமுகம் கணபதிப்பிள்ளை முறச்சக்குத்தி அட்டியல்1 |
| 650 | 13-8-30 | 6 | சாவகச்சேரி ஆறுமுகம் பொன்னுக்குட்டி கடு1 |
| 656 | 13-8-30 | 65 | நுணுவில தனிப்புலிகரம் கந்தையா செட்டிக்காப்பு சோடி 1 |
| 666 | 16-8-30 | 40 | சாவகச்சேரி வாரித்தம்பி முத்துவேலு மெழுதாப்பு1 |
| 677 | 18-8-30 | 65 | மீசாலை சின்னத்தம்பி அருணாசலம் சவிலிக்கொடி1 |
| 685 | 19-8-30 | 10 | சாவகச்சேரி பிணுபோனி இராசையா குண்டுச்சவிலி1 |
| 691 | 20-8-30 | 40 | சாவகச்சேரி வேலுப்பிள்ளை கந்தையா பீலிக்காப்பு சோடி1 |
| 744 | 4-9-30 | 90 | மட்டுவில் கந்தையா பொன்னையா முறச்சக்குத்தித் தாலிக்கொடி1 |
| 793 | 17-9-30 | 30 | சாவகச்சேரி கார்த்திகேசு சின்னப்பு சவிலி அட்டியல்1 |
| 798 | 18-9-30 | 15 | சாவகச்சேரி வேலுப்பிள்ளை காசிப்பிள்ளை சிறுபிள்ளைக்காப்பு சோடி1 |
| 826 | 25-9-30 | 10 | எழுதுமட்டுவாள் பிரமுத்து சின்னையா காப்பு மூப்புச் சோடி1 |
| 865 | 6-10-30 | 20 | சேறணபற்று முருகேசு பொன்னையா பொன் கம்பிப்பூரானட்டியல்1 |
| 875 | 11-10-30 | 15 | கொடி. சின்னத்தம்பி பென் செல்லம் குண்டுச்சவிலி 1 |
| 896 | 13-10-30 | 5 | சாவகச்சேரி சின்னையா நாகலிங்கம் கடு 1 |
| 963 | 25-10-30 | 35 | சாவகச்சேரி சண்முகம் ஐயாத்துரை பீலிக்காப்பு சோடி1 |

விற்பனவு:—பிரசோற்பத்தி வரு மார்கழி மாசம் 13ந் திகதி (28-12-31) திங்கட்கிழமை காலை 10 மணியளவில் எடுபட்டாதவை பிறகேசலாக மிகுதி மேற்படியாரிடத்தில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

(Mis 428. 14&17)

சி. வேலுப்பிள்ளை உடையார்
வெந்திஸ்மேஸ்தர்.

அநேக பரிசுகளும், தங்க மெடல்களும், ஏராளமான நற்சாட்சிகளும் பெற்று உலகெங்கும புகழ்பெறறுவிளங்குவதோடு 25-8-23ல சென்னையிலும, 14-4-27ல மதுரையிலும நடந்த வைத்திய மகாநாடுகளில இவர்மருந்துகள முதல்தர தேவஞஷ தங்கமென தங்கமெடல்களுக, வைத்திய ஆசிரியர்பட்டமும இவர் பெற்றவர்.

கவலைப் படாதீர்கள்! — உத்தரவாதமுள்ளது. | கவலைப் படாதீர்கள்! — உண்மையானது.




பிற வைத்தியர்களால் தீராதென்று விடப்பட்ட வியாதிகளையும், வமிசபரம்பரையாய்த் தொடர்ந்து வரும காம வியாதிகளையும அடியோடு வேரறுத்து பூரணகுணத்தை அடையச்செய்வது

### சி. எம். சாமி குருதாம்பர பஸ்பம்.

என்னும் உயர்ந்த மருந்து ஒன்றென்பதை யாவருமறிந்திருக்கின்றனர்.

திமிர், குஷ்டம், ரணம், சூலை, கிரந்தி, பத்து, மேகம், தடிப்புகள் மாறிவிட்டன, ஆருத குழிப்புண் ஆறிவிட்டது, இருமல் குன்மம், வெள்ளை, வெட்டை, பவுந்திரம், மூலம, நீர்க்கடுப்பு, எரிச்சல் முதலிய எல்லா வியாதிகளும தீர்ந்துவிட்டதென்று தினம நற்சாட்சிகள் வந்த வண்ணமாயிருக்கின்றன. வியாதிகளை விபரமாய் எழுதவும்.

50 வேளை பஸ்பம அனுபானத்துடன் விலை ரூ. 25. ஏழைகளுக்குப் பாதிவிலை.

இழந்த பலத்தை திரும்பப் பெறவேண்டுமா?
எமது

### மன்மத குளிகையை
உபயோகியுங்கள்.

திடகாத்திரர்களாய், வீரபுருஷர்களாய், நல்ல ஆரோக்கியமும், ஆயுள் விர்த்தியுமடைந்து உலகவாழ்க்கையில் இன்புற்று வாழ்வீர்கள்.

தாதுபுஷ்டிக்கு நிகரற்றது. ஒரே குளிகையில் பரீட்சிக்கலாம். இழந்த ஆண்மையும, பலமும திருமபிவரும. நல்ல ஜீரணம, ரத்தவிர்த்தி, இந்திரியக்கட்டு, போகசக்தி, தாதுபுஷ்டி இவற்றைத்தரவல்லது எவ்வித பலஹீனம், தாதுநஷ்டம, துரிதஸ்கலிதம இப்புவளி, உஷ்ணரோகஙகள தீர்க்கும. ஒருமுறை பரீட்சித்தவர்களுக்கே உணமை விளங்கும.

60-குளிகை ரூ. 5. 30-குளிகை ரூ. 3. மாதிரிக்கு 20 குளிகை ரூ. 2.
வி. பி. சார்ஜ் வேறு.

ஏராளமான நற்சாட்சிகளை கேட்லாக்கில் காணலாம்.

பினாங்கு, சிங்கப்பூர், மலாக்கா முதலிய அக்கியநாட்டார் மருந்துக்கு ஆடர் செய்யும்போது முற்பணம அனுபபவேணடும்.

**C. மலையப்பசாமி,** நித்தியானந்த வைத்தியசாலை
பழநி; S. I.

(Q. 15. 10-12—9-3-32, B)

## சைவ மகிமை.

[ச. சச்சிதானந்தம்பிள்ளை.]

(முற்றொடர்)

இவை போன்ற பிரபலப் பிரமாணங்கள் ஒருவனுக்குப் பல மூர்த்தி வழிபாடு கூடாது என்று கூறுவது கன்றாய்த் தெரிகின்றது. ஒரே மூர்த்தியும் ஒரே மந்திரமும் வேண்டும். இதைச் சைவர்கள் கவனிப்பதில்லை. பல தெய்வ வழிபாடு அவர்கட்குக் கூடாது. சொரூப லக்ஷணத்திற்குப் போனால் எல்லை ஒன்றும் எற்படாது. அது ஞானிகட்குரியது. ஏனையோர் உருவத்தைப் பற்றிச் செல்வோர், சரியையாதி மூன்றும் மூர்த்தியைப் பற்றியவையாதலின் சொரூபம் மூர்த்தமல்ல மூர்த்தி அதற்கு ஆசாரியன். பெரும்பாலோர் சாரூபத்திற்குள் நிற்போர். இவர்கள் ஒரே மூர்த்தியை வழிபடாவிடின், பொதுக் கதிக்குரியராய் இந்திரபதமட்டும் கிடைக்கப் பெறுவர். நியானமென்பதும் ஒருமூர்த்திபாவனையிலாவது; இரண்டு மூர்த்தி யுபாசனை கூடாது. இப்படிச் செய்வது, ஒருகோயிலை இடித்து இன்னொரு கோயிலைக் கட்டுவதை யொக்கும். சிவனையே கதியாகக் கொள்பவன், விண்டுவாதி தேவர்களை விடவேண்டும். பிற மூர்த்தி யுபாசகர்கட்கும் இது போன்ற நியமம் ஏற்றதே. ஆனால், மற்றத் தேவர்களைக் கண்டால் பொதுவகையில வழிபடுமின். பல சில்லறை மந்திரங்கள் விரும்பன்மின். எத்துன்பம் வரினும் உம்மொரு மூர்த்தியையே கொண்மின். ஆசாரிய சுவாமிகள் நால்வரும் சிவனைத் தவிர வேறெத்தெய்வத்தின்மேலும் பாடவில்லை. கருதுமின். அவர்கள்காலத்துக்கு முன்பு பலதெய்வவழிபாடிருந்தது. அவர்கள் ஒரேதெய்வம் வேண்டுமென்று வற்புறுத்தினர்.

……………இவ்வுண்மைகளையெல்லாம் கருதி, சைவசமயாசாரியர்கள் உபதேசித்தருளியபடி சைவர் ஏகமூர்த்தி வழிபாட்டில் உறைத்துநிற்கக்கடவர்.

உங்கட்குச் சிவன்கூடவேண்டியதில்லை; சம்பந்தரைப்பற்றினால் சாலும். இவரைப் பற்றினால், சிவனைப்பற்றியுள்ள இவர், அவரிடம் உங்களைச் சேர்ப்பர். சீகாழிக்கண்ணுடைய வள்ளலார்க் கிம்முறை பயன்படாது.

"என்னனை யென்னனை
 யென்னனை யேகமிரண்
டென்றும்ற் சும்மா
 இருவென்று—சொன்னான்
திருஞான சம்பந்தன்
 சீகாழி நாட
னருளாளன் ஞான
 விநோதன்"

என்னும் அவர் திருவாக்கால் உணர்க.

முத்தியி லிருப்பவர் தோன்றுவரோ என்று ஐயுறவேண்டா. திருவுளப் பாட்டின்படி எதுவுமாம். அதனால் அவர் முத்திசிலை கெடாது. இப்படிப் பலிருக்கலாம்.

இப்பெருநிலை இக்காட்சைவர்க்கு வெகு தூரமாய்விட்டது. நால்வர் பாட்டைத் தாளம் போட்டுப் பலர் பாடுகிறார்கள். ஆனால் பல தெய்வங்களையும் கும்பிடுகிறார்கள். இச்சென்மம் கடைத்தேறுதற்கு ஒரு தெய்வவழிபாடு அவசியம். இது செய்யாதவன் முத்திமார்க்கத்தின் முதற்படியிலும் கால்வைக்காதவன் என்று கட்டுரைக்கின்றேன். அன்புடையீர், காட்டேறி முதலியவற்றைக் கும்பிடாதீர்கள். அதனால் உங்கள்பக்தி கெடும். ……… நீங்கள் வணங்கற்குரிய ஏகமூர்த்தியை முற்றிலும் நம்புங்கள். வினைவழி துன்பம் வரும். வந்தாலும் அம்மூர்த்தி வழிபாட்டில் நழுவாதீர்கள்.

"வானமிடிந்து தலையில் விழும்படி
 வம்புவந்தாலும்—என்னை அந்தக்
கானகத்தில் முருகையன் திருவருள்
 கைவிடமாட்டாதே"*

என்னும் உறுதிப்பாட்டையுய்த்துணருங்கள். …………பலதெய்வ வழிபாடுடையானொருவனை நோக்கி, "நீ யாருடைய பக்தன்" என மற்றொருவன் வினவின், அவன் என்ன சொல்லுவான்? பசபசவென விழிப்பானன்றே! 'ஆண்டவன் பத்தன்' எனலிற் சாரமில்லை! பொதுவாதலின். அனாற்குச், சிவசக்திநிதிற் பாத்தியமில்லை.

இக்காட்டில் எழுந்த அநந்த நூல்களில் சிவனே பிரபல மூர்த்தியாயுளார். அவருக்குப் பல வடிவமுண்டு மண்டைமாலையும் கோரரூபமும் உள்ளனவே என்னில், அக்கோலம சங்கார கிருத்திய மூர்த்தியாகிய ஒரு மூர்த்திக்குத்தான் உண்டு. சிவன் நிரம்ப அழகிய மூர்த்தி. இநகாங்களோடும் கூட வருவார். இயமனுக்குக் கூட இச்சக்தியுள்ளது இராமர் ரிஷிபத்தாதலால் அவர் கடைசிக் காலத்தில் இயமன் ரிஷியாய் வந்தான். இயமனுக்குள்ள இச்சத்தி சிவனுக்காகாதா? சிவனுக்குத் தன்னுபாசகர் வேண்டு முருவமெல்லாம் எடுக்கும் ஆற்றலுண்டு. எபபடி. பே மண்டை மாலையுடையவ ரவரென்றெண்ணற்க. எப்போதும் அவர் கொண்டுள்ள வடிவம் மகரிஷி வடிவம். ரிஷிகளால் வேண்டப்பட்டு அவர்கட்கு ஏயகமாய்ச் சிவனார் விளங்குவர். ரிஷிகளை அரசர் வணங்குவர். "திருவுடை மன்னரைக் காணில் திருமாலைக் கண்டேனே" என்று புகழப்படுந் தன்மையுடையரேயெனினும், அரசரை ரிஷிகள் வணங்கார். இப்பெருமையுடைய ரிஷிகளுக் தேவர்களும் மனிதர்களும் வணங்கும் மஹாரிஷி சிவனென் றுணர்மின். ஆகலின் அவரை வணங்குவோரே மோக்ஷம் பெறுவர் பிறதேவரெவரும் தம் முபாஸகர் மனிதராய் வந்தபிறகுதான் தம் கதிகொடுப்பர். ஆனால் கதிநாயகரான சிவனோ அஃறிணையுயிர்ப் பொருளகட்கும் பரகதி கொடுக்கின்றார். குரங்கு, கரிக்குருவி, சிலந்தி வரை முதலியவற்றிற்கும் முத்தி கொடுத்த செய்தி கருதுக.

(தொடரும்)

"சித்தாந்தம்".

* இது சுவாமிகள் அருளிச்செய்த திருவலங்கற்றிரட்டிலுள்ள சமாதான சங்கீதத்தின் சரணங்களி லொன்று. (திருவலங்கற்றிரட்டு பக்கம், ௯உ௪.)

—ச. ச.

---

காலஞ்சென்ற வீ. எம். மதனுலால்: பாபுலால்: இவர்களின் ஆதனங்களைச் சேர்ந்த யாழ்ப்பாணம் டிஸ்ற்றிக்கோட்டில் (5870) (5828) உரிமைத்தத்துவவழக்குகளில் இருவர்களாலும் கொடுக்குமதியான அடியிற்காணும் கடன்காரர்களுக்கு இப்போது பிரித்து ஈவுபண்ணிக்கொடுக்கும் தொகைவிபரம் :—


| வழக்கின் இலக்கம். | கடன் கொடுத்தவர்களின் பெயர். | கடன்தொகை ரூபா. சதம். | கொடுபட்ட தொகை ரூபா. சதம். | கொடுக்க வேண்டிய பாக்கி தொகை ரூபா. சதம். | 10 விதம் இப்போது கொடுக்கக் கூடியதொகை ரூபா. சதம். |
|---|---|---|---|---|---|
| D. C. C 24892 | சி கரு சி. சி த ஜேம்ஸ்பின்லே | 18252 90 | 4987 29 | 13865 61 | |
| 23723 | | 56539 73 | 15053 27 | 41486 56 | |
| 23810 | ,, | 4892 37 | 1290 19 | 602 18 | |
| 24532 | ,, | 3505 25 | 1164 93 | 2340 82 | |
| 23785 | ,, | 28097 13 | 20232 19 | 7864 94 | |
| 24483 | ,, | 19747 46 | 5190 68 | 14556 78 | |
| 23740 | ,, | 61941 24 | 16364 36 | 45576 88 | |
| 25100 | உலக சண ராமநாதன்செட்டி | 153843 06 | 40559 16 | 113283 90 | |
| 21987 | சா ரும மு அ ராமன்செட்டி | 44094 02 | 11885 02 | 32209 00 | |
| 21983 | சா ரும மு ரும ரும வள்ளியப்பசெட்டி | 30329 91 | 8201 66 | 22128 25 | |
| 28361 | காறன அண்டு கம்பெனி | 24530 27 | 1809 31 | 22722 96 | 643 91 |
| 23554 | தேவதத்தா நானக்சந்த | 29550 85 | 2179 93 | 27370 92 | 775 15 |
| 23483 | வி வி கா ராமகிருஷ்ண அய்யர் | 2800 00 | | 2300 00 | 230 00 |
| 23966 | S A நாகப்பசெட்டி | 560 19 | | 560 19 | 56 0 |
| 23486 | V K N K சந்தராஜ அய்யர் | 2600 00 | | 2600 00 | 260 00 |
| 23224 | A M லிங்கப்பசெட்டி | 1732 82 | | 1732 82 | 173 28 |
| 23187 | V N P A பட்டாபிராம் ஐயர் | 2750 00 | | 2750 00 | 275 00 |
| | S S M S அப்துல்காடர் | 1730 15 | | 1730 15 | 173 01 |
| | A R லாவிம் | 233 10 | | 233 10 | 23 31 |
| | R S மூசா அண்கோ | 3583 90 | | 3583 90 | 358 39 |
| | A H வலி முகம்மது | 1283 10 | | 1283 10 | 128 31 |
| | காஜி அப்துல்கனிஙேகா | 304 75 | | 304 75 | 30 47 |
| | புக்ராக்கர் செல்லமுத்து | 18540 04 | | 18540 04 | 1854 00 |
| | N M S பேம் கம்பனி | 15 36 | | 15 86 | 1 53 |
| | R K பொன்னுத்துரை | 27 95 | | 27 95 | 2 79 |
| | P R சோன் | 184 82 | | 184 82 | 18 48 |
| | A சுப்பிரமணிய ஐயர் | 793 79 | | 793 79 | 79 37 |
| | அழகரெட்ணம் கொழும்பு | 1648 62 | | 1648 62 | 164 86 |
| | கொமமேர்சல் கோப்பிரேசன் | 541 67 | | 541 67 | 54 16 |
| | திசைவீரசிங்கம் | 36 60 | | 36 60 | 3 66 |
| | K S ரெங்கசாமிசெட்டி | 1480 80 | | 1480 80 | 148 08 |
| | மோகனலால் சாம்லால் | 6774 85 | | 6774 85 | 677 48 |
| | சவண்டு ராமலிங்கம்பிள்ளை | 1468 11 | | 1468 11 | 146 81 |
| | L பாலகிருஷ்ண தாஸ் | 12329 62 | | 12329 62 | 1232 96 |
| 22239 | T நாராணபிள்ளை | 35662 00 | | 35662 00 | 3566 20 |
| | T தங்கப்பசெட்டி | 14 01 | | 14 01 | 1 40 |
| | K R M குப்பய்யர் | 612 64 | | 612 64 | 61 26 |
| | T K தண்கோபாகர்ஸ் | 8595 41 | | 8595 41 | 859 54 |
| | M S ராமசாமிசெட்டி | 5267 94 | | 5267 94 | 526 79 |
| | T முனிசாமிசெட்டி | 287 08 | | 287 08 | 28 70 |
| | M M கலியாணசுந்தரம்செட்டி | 345 65 | | 345 65 | 34 56 |
| | K R M ரெங்கசாமி பாகவதர் | 12 44 | | 12 44 | 1 24 |
| | முனியப்பசெட்டி பாடிப்பேட்டை | 2002 20 | | 2002 20 | 200 22 |
| | M கோவிந்ததாஸ் | 71 05 | | 71 05 | 7 10 |
| | T P S A வேணுகோபால்செட்டி | 2850 72 | | 2350 72 | 285 07 |
| | P கண்ணப்பசெட்டி | 1416 33 | | 1416 33 | 141 63 |
| | S M குப்பய்யர் | 618 90 | | 618 90 | 61 89 |
| | கொத்தா சங்கய்யாசெட்டி | 142 68 | | 142 68 | 14 26 |
| | இன்றர்ன்ட்கம்பனி பசார்ஸ் | 1364 72 | | 1364 72 | 136 47 |
| | A M லிங்கப்பசெட்டி | 1751 82 | | 1751 82 | 175 18 |
| | A R M N கிருஷ்ணய்யன் செட்டி | 463 73 | | 463 73 | 46 37 |
| | K N சுந்தரசாமிசெட்டி | 618 90 | | 618 90 | 61 89 |
| | M M சாந்தட | 2462 63 | | 2462 63 | 246 26 |
| | A K சாமய்யா அன்சன்ஸ் | 328 99 | | 323 99 | 32 39 |
| | K T கோவிந்தராஜ ஐய்யர் | 1858 39 | | 1858 39 | 185 88 |
| | A ராமச்சந்திரதாஸ் | 190 63 | | 190 68 | 19 06 |
| | T கோவிந்தாஸ் | 89 50 | | 89 50 | 8 95 |
| | P K வேலுசெட்டி | 357 46 | | 357 46 | 35 ·74 |
| | N M S T பன்னசபை | 1900 00 | | 1900 00 | 190 00 |
| 26300 | டெல்மச்ச பொசைஸ்கம்பனி | 47631 63 | 3000 00 | 44631 63 | 1763 16 |
| | கோபாலகிருஷ்ண அய்யர் | 95 98 | | 95 98 | 9 59 |
| | S V S T கொழும்பு | 3264 03 | | 3264 03 | 326 40 |
| | மோகனலால் கிஷாகிலால் | 20000 00 | | 20000 00 | 2000 00 |
| | ராமச்சந்திர தேவதாஸ் | 25000 00 | | 25000 00 | 2500 00 |
| | V சின்னத்தம்பி | 387 30 | | 387 30 | 38 73 |
| | H R அரியகுட்டி | 140 00 | | 140 00 | 14 00 |
| | ஜெயலபோல் | 1863 96 | | 1863 96 | 186 39 |
| | S குமாரசூரியர் | 92 79 | | 92 79 | 9 27 |
| | சேகு அப்துல்காதர் | 170 00 | | 170 00 | 17 00 |
| | புரோக்கர் சண்முகம் | 433 67 | | 433 67 | 43 36 |
| 22570 | காக்தேவி | 6968 00 | | 6968 00 | 696 80 |
| | | | | செலவு | ரூ 500 00 |
| | | | | ஆ ரூ | 22468 72. |

☞ இதைப்பற்றிய ஆட்சேபனைகள் ஏதும் இருக்குமானால் வருகிற 1932-ம் ௵ ஜெனவரி மாதம் 18-ந் திகதிக்குமுந் குறித்த டிஸ்திறிக் கோட்டில் வெளிப்படுத் தெரிவிக்கவேண்டியது

இ. முருகேசம்பிள்ளை,
தத்துவகாரனின் பிறக்டர்,
யாழ்ப்பாணம், 1931-ம் ௵ டிசெம்பர்மீ 9ம்-திகதி.

(Mis 429 14th.)

---




(Y 19 28 9.31 to 27 9 32)

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன், கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள்வாழ்க, நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க, மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

Printed & published by S ADCHALINGAM, residing at Ayanarkovilady, Van: West, Jaffna for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabai, Jaffna. at their Press the Saiva Prakasa Press, Vannarponnai, Jaffna.